**சார்பு நீதிமன்றம், அவினாசி**

**முன்னிலை: திரு.கே.சுரேஷ்குமார், பி.ஏ., பி.எல்.,**
**சார்பு நீதிபதி, அவினாசி**

2023 ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் 17– ஆம், நாள் வியாழக்கிழமை

இடைநிலை மனு எண்.174/2023
இன்
அசல் வழக்கு எண்.15/2015

ரத்தினம் (எ) கனகரத்தினம் ...மனுதாரர்/வாதி

**.. எதிர் ..**

1. அம்மிணியம்மாள் (இறந்தவர்)
2. செல்லமுத்து (இறந்தவர்)
3. வெங்கடாச்சலம்
4. யுவராஜ்
5. மனோஜ்குமார்
6. அருண்குமார்
7. ஹரிபிரசாத்
8. சிவசாமி ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இறுதியாக 17.08.2023ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன் இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.டி.விஜயராகவன் அவர்கள் ஆஜராகியும், 3–ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.தேவராஜன் அவர்கள் ஆஜராகியும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

மனுதாரர் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கில் பிராது பத்தி 12.இ–க்கு பின்னிட்டு 12.ஈ என்ற பத்தியை சேர்த்து பிராதை திருத்தம் செய்துகொள்ள கட்டளை 6 விதி 17

உரிமையியல் நடைமுறை சட்டத்தின்படி, இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2)** வழக்கு நிலுவையில் உள்ளபோது சொத்து பொதுவாக உள்ளதை மறைத்து 3ம் எதிர்மனுதாரர் மோசடியாக பட்டாவை அவர் பெயரில் மாற்றம் செய்து அங்கீகாரம் இல்லாமல் சட்டவிரோதமாக கட்டிடம் கட்டியுள்ளார். 3ம் எதிர்மனுதாரர் பட்டா மாறுதல் செய்தது சம்பந்தமாக மேல்முறையீடு நிலுவையில் உள்ளது. பாகப்பிரிவினை வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளபோது கட்டிடம் கட்டியுள்ளதால் வரி விதிப்போ, மின் இணைப்போ செய்யாமல் நிறுத்திவிட்டனர். அதன் பின்னிட்டு 3ம் எதிர்மனுதாரர் சட்டவிரோதமாக செயல்பட்டுள்ளதால் அதை வைத்துக்கொண்டு அவர் கட்டிடம் கட்டிய பகுதியை தனக்கே ஒதுக்க வேண்டுமென்றும், வருவாய்த்துறை ஆவணங்களில் அவர் பெயரில் வாங்கிவிட்டதால், அவருக்கே பாத்தியம் என்று பிரச்சனை செய்ய வாய்ப்புள்ளதால் மேற்படி சங்கதியை குறித்து இந்த வழக்கில் திருத்தம் செய்ய வேண்டப்பட்டுள்ளது என்றும், 3ம் எதிர்மனுதாரர் பெற்ற வருவாய்த்துறை ஆவணங்களின்படி அவர் கட்டிடம் கட்டியது செல்லாது என்றும், அது மனுதாரரை கட்டுப்படுத்தாது என்றும், வழக்கு நிலுவையில் உள்ளபோது நடைபெற்றதால் அதுசம்பந்தமாக சங்கதியை தான் தாவாவில் கூற வேண்டியுள்ளது என்றும், மேற்கண்ட சூழ்நிலையில் தாவாவை திருத்தம் செய்ய கோரி மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

3) எதிர்மனுதாரர் தரப்பில், மனுதாரரே வருவாய்த்துறை நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளதாக ஒப்புக்கொண்டுள்ளார். அவர் மேல்முறையீடு விவரங்களை சமர்ப்பிக்கவில்லை. எனவே, மனுதாரர் வழக்குரையில் திருத்தம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றும், பிராதை திருத்தம் செய்வது சம்பந்தமாக வேறு பரிகோரம் ஏதும் கோரவில்லை என்றும், தகைமை அடிப்படையில் கட்டுமான பகுதியை ஒதுக்கி கொடுக்க கோர 3ம் எதிர்மனுதாரர் உரிமையுள்ளவர் என்று குறிப்பிட்டபோதிலும், அதை இறுதிநிலை தீர்ப்பாணையில் தான் செய்ய முடியும். வழக்கை காலம் தாழ்த்துவதற்காகவே மனுதாரர் இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

4) மனு மற்றும் எதிருரை பரிசீலனை செய்யப்பட்டது. இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது.

5) **<u>பிரச்சனை:</u>** மனுதாரர் கோரிய பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? இல்லையா? என்பதே இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம்.

6) **<u>பிரச்சனைக்கான தீர்வு:</u>**

மனு மற்றும் மனுவுடன் இணைக்கப்பட்டுள்ள பிரமாண வாக்குமூலம் கவனமாக பரிசீலித்து கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையையும் கவனமாக பரிசீலித்து கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

மனுதாரர் வழக்கு நிலுவையில் இருக்கும்போது 3ம் எதிர்மனுதாரர் மனு சொத்தில் அனுமதியின்றி கட்டிடம் கட்டியுள்ளதாக தெரிவித்துள்ளார். மேற்படி சங்கதியை வழக்குரையில் திருத்தம் செய்து நீதிமன்றத்தின் முன்கொணர கோருகிறார். 3 ம் எதிர்மனுதாரர் வழக்குச்சொத்தில் தான் வழக்கு நிலுவையில் உள்ளபோது கட்டிம் கட்டிய சங்கதியை மறுக்கவில்லை. மாறாக, காலவிரயம் செய்யும் நோக்கத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார். மேற்கண்ட சூழ்நிலையில், மனுதாருக்கு தன் தரப்பு முழுவதையும் நீதிமன்றத்தில் தெரிவிக்க வாய்ப்பு வழங்க வேண்டுமென்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் இந்த மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,** மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் நேரிடையாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிறகு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் 17.08.2023 அன்று அவையறிய பகரப்பட்டது.

(ஒம்/-) கே.சுரேஷ்குமார்,
சார்பு நீதிபதி,
அவிநாசி.

**பிற்சேர்க்கை : இல்லை**

(ஒம்/-) கே.சுரேஷ்குமார்,
சார்பு நீதிபதி,
அவிநாசி.

இ.நி.ம.எண்.174/2023
இன்
அ.வ.எண்.15/2015
சீரான/வரைவு உத்தரவு
நாள்.17.08.2023